| O.S.No. 340/2022 | PW1: திரு.மாரிமுத்து<br>த/பெ. திரு.கங்காதரன் | 31-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) என் தந்தைக்கு 2 மகன்கள். 2 மகள்கள் வாரிசுகள் ஆகும். வழக்கு சொத்துக்களை என் தந்தை 1993ல் கிரையம் வாங்கினார். அந்த சொத்துக்களில் நாங்கள் ரொம்ப ஆண்டுகளாக குடும்பம் இருந்தோம். 1ம் பிரதிவாதி முனுசாமி எனது அண்ணன். 2, 3 பிரதிவாதிகள் என் தங்கைகள். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஒரே தேதியில் திருமணம் நடந்தது. அதன்பிறகு தான் 2, 3 பிரதிவாதிகளுக்கு 2013ம் ஆண்டு திருமணம் நடந்தது. மேற்படி திருமண செலவுகளை எனது தந்தைதான் பார்த்தார். திருமணத்திற்கு பிறகு நான் தனிக்குடித்தனம் சென்றேன். எனக்கு 2 பெண் 1 ஆண் வாரிசு ஆகும். என் தாய் தந்தையரை நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல.

2) நான் தான் பராமரித்தேன். 3ம் பிரதிவாதிக்கு வயதாகிவிட்டதால் அவருக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று அவரது தந்தை என்னிடம் பணம் கேட்டார்கள் என்றாலும், நான் கொடுக்க மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. என் தந்தை கொத்தனார் வேலை செய்து வந்தார். என் தந்தை இறக்கும் போது அவருக்கு 80 வயது இருக்கும். என் தந்தையை நான் பராமரிக்காததாலும், 3ம் பிரதிவாதியின் திருமணத்திற்காகவும் அவருக்கு சொந்தமான சொத்தில் 1300 சதுரடியை 2010ம் ஆண்டு 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையை நான் சரியாக பராமரிக்காததால் மீதமுள்ள 4 செண்டினை என் தந்தை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி பாத்தியப்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

3) நான் சொல்வது போல் சொத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து ஏதும் நடைபெறவில்லை என்றாலும் அந்த பஞ்சாயத்தில் என் தந்தை சொத்து தருவதாக சொன்னார் என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு என் தந்தை உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அவ்வாறு எதுவும் எழுதிவைக்கவில்லை. பஞ்சாயத்து செய்தவர்களை சாட்சியாக விசாரிக்கப் போகிறீர்களா என்றால் இல்லை. நான் 2013ம் வருடம் தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் மற்றும் எனது தந்தைக்கு எதிராக அ.வ.எண்.39/2013வழக்கு தாக்கல செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் பாகம் கேட்டு போட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பினை எதிர்த்து நான் A.S.3/2015 மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்தேன். அந்த மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை.

4) என் தந்தைக்கு உரிமையான சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதிவைத்துவிட்டார் என்றாலும், மற்ற சொத்தினை கிரையம் செய்துவிட்டார் என்றாலும், அதனால் தாவா சொத்தில் எனக்கு எந்த பாகஉரிமையும் இல்லை ன்று சொன்னாலும் சரியல்ல. அதனால் தாவா சொத்தைப் பொறுத்து நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தற்போது நான் வாடகை வீட்டில் தான் இருக்கிறேன். தாவா சொத்தில் நான் சுவாதீனம் இல்லை என்றாலும், அது பிரதிவாதிகளுக்கு சொந்தமான என்றாலும்,

அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.31 19:21:10 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**